GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA6A** **5505–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.**

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

**HUMAN RIGHTS LAW**

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the provisions of the U.N. Charter relating to Human Rights.
ஐக்கிய நாடுகள் சாசனத்தில் மனித உரிமைகள் குறித்த வகையங்களை விளக்குக.

2. Discuss the Constitutional Remedies for enforcement of Human Rights under the Indian Constitution.
இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழான மனித உரிமைகள் செயலாக்கம் செய்வது குறித்த அரசமைப்பு தீர்வழிகளை விவாதிக்க.

3. "Every one has right not to be subject to torture, cruelty or inhuman treatment" – Comment.
''சித்திரவதை, கொடுமை அல்லது மனிதாபிமானமற்ற துன்புறுத்தல் இன்றி வாழ்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது'' - விமர்சிக்க.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the composition, powers and functions of the National Human Rights Commission (NHRC).
தேசீய மனித உரிமை ஆணையத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகளை விளக்கவும்.

5. Discuss the human rights enshrined in the African Charter.
ஆப்பிரிக்கா சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகளை விவாதிக்கவும்.

6. Explain the origin and development of the International Humanitarian Law (IHL).
சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை விளக்கவும்.

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Equal pay for equal work.

சமமான பணிக்கு சம ஊதியம்.

(b) American Revolution.

அமெரிக்க புரட்சி.

(c) UNESCO.

யுனேஸ்கோ.

(d) Refugees.

அகதிகள்.

(e) Rights of Minorities.

சிறுபான்மையினரின் உரிமைகள்.

(f) ICCPR, 1966.

ஐசிசிபிஆர், 1966.

(g) D.K. Basu v. State of West Bengal (AIR 1994 SC)

டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க அரசு (AIR 1994 SC).

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' was arrested by police authorities and committed him in jail for commission of theft. 'X' is in prison for past 12 years. But he was in jail without trial for charge of theft. The People Movement filed a case against the government for compensation on the ground of right to life with human dignity has been deprived. Will the People Movement win the case?

காவல் அதிகாரிகளால் 'X' கைது செய்யப்படுகிறார். அதனால் திருட்டுக் குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்படுகிறார். கடந்த 12 ஆண்டுகளாக 'X' சிறையிலிருக்கிறார். ஆனால் திருட்டு குற்றச்சாட்டுக்கு நீதிவிசாரணையின்றி சிறையிலுள்ளார். இதையறிந்த ''மக்கள் இயக்கம்'' அமைப்பு 'X'-ன் நேர்த்தியான வாழ்வாதார உரிமையானது பறிக்கப்பட்டதாக கூறி நீதிமன்றத்தில் அரசிற்கு எதிராக இழப்பீடு கோரி வழக்குத் தாக்கல் செய்கிறது. இதில் ''மக்கள் இயக்கம்'' இவ்வழக்கில் வெற்றி பெறுமா?

9. 'A' is a German National who is residing in U.K. The U.S.A. authorities requested U.K. authority to extradite 'A' to the United States where he has committed offence. 'A' has challenged the requisition of U.S.A. authorities before the European Union Human Rights Courts (EHRCts) on the ground that he would be sentenced to death on charge of capital murder and be subjected to the death row phenomenon. It would constitute a breach of Art.3 of the European Union Convention on Human Rights. Can 'A' win the case?

இங்கிலாந்தில் குடியிருக்கும் 'அ' என்னும் ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்தவரை அமெரிக்காவில் புரிந்த குற்றத்திற்காக மீட்டொப்படைக்கும்படி அமெரிக்க அதிகாரிகள் இங்கிலாந்து அதிகாரிகளிடம் வேண்டுதல் செய்கின்றனர். 'அ' மீட்டொப்படைத்தால் மரணதண்டனை விதிக்கப்படுமெனவும் அதே போன்ற சூழல் நிலவுவதாகவும் அதனால் ஐரோப்பிய ஒன்றிய உடன்படிக்கை ஷரத்து 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமை மீறப்படும்மென கூறி அமெரிக்க வேண்டுதலுக்கு எதிராக தன்னை மீட்டொப்படைக்கக்கூடாது எனக் கூறி ஐரோப்பா மனித உரிமை நீதிமன்றத்தின் முன் வழக்கை தாக்கல் செய்கிறார். இவ்வழக்கில் 'அ' வெற்றி பெறுவாரா?

10. Mr. 'X' and accomplices have been arrested and charge sheet filed for offence of dacoity with murder. The special court has been constituted for trying Mr. 'X' and his associates wherein special procedure to be followed. Mr. 'X' and his associates have challenged before the High Court that their right to fair and public hearing has been violated. Can 'X' and his associates win the case?

திரு. 'X'ம் அவரின் கூட்டாளிகளும் கூட்டுக்கொள்ளையுடன் கூடிய கொலைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு இறுதி குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது. இக்குற்றத்தை விசாரணை செய்வதற்காக சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டு சிறப்பு நடைமுறையும் தொடங்கும் என அறிவுறுத்தப்பட்டது. 'X'ம் அவரின் கூட்டாளிகளும் அவர்களின் "உரிமையான உண்மையான மற்றும் பொது விசாரணையானது" மீறப்பட்டதாக கூறி உயர்நீதிமன்றத்தில் எதிர்கிறார்கள். இதில் 'X'ம் அவரது கூட்டாளிகளும் வெற்றி பெற முடியுமா?

---

(2)

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

TA6B

5429–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year Regular Course)

Third Year – Sixth Semester

CRIMINOLOGY AND PENOLOGY

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the contributions made by Bentham and Beccaria in the development of criminology.

   குற்றவியல் ஆய்வின் வளர்ச்சிக்கு பென்த்தம் மற்றும் பெக்காரியா அவர்கள் ஆற்றிய பங்களிப்பினை விளக்குக.

2. Describe the differential association theory as propounded by Sutherland.

   சதர்லேண்டால் முன்மொழியப்பட்ட வேறுபட்ட சங்கக் கோட்பாட்டினை விவரிக்க.

3. Explain the system of juvenile justice in India.

   இந்தியாவில் இளஞ்சிறார் நீதிமுறையினைப் பற்றி விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the influence of family on the causation of crime.

   குற்றம் புரிவதற்கான காரணிகளில் குடும்பத்தின் தாக்கத்தினை விளக்குக.

5. What are the kinds of punishment? Narrate the importance of that punishment.

   தண்டனையின் வகைகள் யாவை? அவற்றின் முக்கியத்துவத்தினை எழுதுக.

6. Define computer crime. What are the kinds of computer crime?

   கணினி குற்றத்தினை வரையறு. கணினிக் குற்றத்தின் வகைகள் யாவை?

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Classification of crimes

குற்றங்களின் வகைப்பாடு

(b) Santhanam Committee Report

சந்தானம் குழு அறிக்கை

(c) Dowry

வரதட்சிணை

(d) Victimless crimes

பாதிக்கப்பட்டோர் அற்ற குற்றங்கள்

(e) Police Bureaucracy

காவல்துறையின் அதிகாரத்துவம்

(f) Plea bargaining

குற்ற பேரம்

(g) Prison Labour

சிறைத் தொழிலாளர்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The accused, a 19 years old student, was sentenced by the trial court to 2 years imprisonment and fine of Rs.2,000 for scooter theft and 6 months imprisonment and fine Rs.500 for car lifting; both the sentences were to run concurrently. He wants to prefer an appeal. Advise.

19 வயதுடைய ஒரு மாணவன், விசாரணை நீதிமன்றத்தால் குற்றம் சுமத்தப்பட்டு, ஸ்கூட்டர் திருட்டிற்காக 2 வருடம் சிறைத் தண்டனையும், ரூ.2,000/- அபராதமும், மற்றும் கார் கடத்துதலுக்காக 6 மாதங்கள் சிறைத்தண்டனையும், ரூ.500 அபராதமும் விதிக்கப்பட்டது. இரண்டும் ஏக காலத்தில் அனுபவிக்கும்படி ஆணையிடப்பட்டது. அவர் மேல்முறையீடு செய்ய விரும்புகிறார். அறிவுரை வழங்கவும்.

9. The petitioner was detained under the defence of India Rules, 1962. He wrote a scientific book on science but was not allowed to publish it by the prison authorities. Does a prisoner have a right to publish? Decide.

இந்திய பாதுகாப்புச் சட்ட விதிகள், 1962ன் படி மனுதாரர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அப்போது அவர் அறிவியல் சம்பந்தமாக ஒரு விஞ்ஞானப் புத்தகத்தை எழுதினார். ஆனால் சிறை அதிகாரிகள், அதனை பிரசுரிக்கவிடவில்லை. ஒரு கைதிக்கு பிரசுரிக்கும் உரிமை உள்ளதா? தீர்மானிக்க.

10. A 16 years old boy has committed pickpocketing. The probation officer recommended that apparently he is an associate of the co-accused who is a hardened criminal and he does not deserve the benefit of the section 4 of the Probation of Offenders Act, 1958. On the out set of the report of the probation officer, he was given six months rigorous imprisonment. Whether the said punishment is suitable to him. Decide.

ஒரு 16 வயது கொண்ட சிறுவன், சட்டைப்பையில் களவாடல் குற்றத்தைப் புரிந்தார். அதற்காக நன்னடத்தை அலுவலர், அவர் கடினமாக குற்றங்களை புரியக்கூடிய உடன் குற்றம் சுமத்தப்பட்டவருடன் மிகவும் நெருங்கிய தொடர்பில் இருப்பதாகவும் மற்றும் குற்றவாளிகளின் நன்னடத்தை கண்காணிப்பு விடுதலைச் சட்டம், 1958, பிரிவு-4ன் கீழ் அவரால் பலனடைய முடியாது எனவும் பரிந்துரை மேற்கொண்டார். நன்னடத்தை அலுவலரின் அறிக்கையின் விளைவாக, அவருக்கு 6 மாதங்கள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. இவ்வாறான தண்டனை அவருக்கு பொருத்தமானதுதானா? தீர்மானிக்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA6C** **5430-22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year – Regular Course)

Third Year – Sixth Semester

INTELLECTUAL PROPERTY LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Trade Mark and explain the remedies available in case of infringement of Trade Mark.

   வணிகக் குறியீடு என்பதனை வரையறை செய் மற்றும் வணிகக் குறியீடு உரிமை மீறலுக்கு உண்டான தீர்வழிகள் யாவை என்பதனை விவரிக்க.

2. What is compulsory licensing of patents? Under what circumstances it can be granted under the Indian Patents Act, 1970?

   புத்தாக்க உரிமைகளுக்கு கட்டாய உரிமம் வழங்குதல் என்றால் என்ன? எந்த சூழ்நிலைகளில் புத்தாக்க உரிமைகளுக்கு கட்டாய உரிமம் வழங்கப்படும் என்பதனை புத்தாக்கங்கள் சட்டம் 1970ன் கீழ் விளக்குக.

3. Briefly explain the works in which copyright does subsist.

   எத்தகைய படைப்புகளில் பதிப்புரிமை உள்ளது என்பதை விவரமாக விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the salient features of Berne Convention.

   பெர்ன் உடன்பாட்டின் சிறப்பியல்புகளை விளக்குக.

5. Enumerate the salient features of the Designs Act, 2000.

   வடிவமைப்பு சட்டம், 2000 ஆம் ஆண்டின் சிறப்பியல்புகளை எண்ணிக்கையிட்டு விளக்குக.

6. Explain the procedure for assignments and transmission of Trade Marks.

வணிகக் குறிகளின் மாற்றாக்கமும் மற்றும் உரிமை மாற்றம் செய்தல் பற்றி விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Well-known Trade Mark

நன்கறியப்பட்ட வணிகக்குறி

(b) Trade Secrets

வணிக இரகசியங்கள்

(c) Infringement of Trade marks

வணிகக் குறியீடுகளின் உரிமை மீறல்

(d) Procedure to obtain patent

புத்தாக்க உரிமையை பெறுவதற்கான வழிமுறைகள்

(e) Term of copyright

பதிப்புரிமைக்கான கால அளவு

(f) Infringement of copyright in a design.

வடிவமைப்பில் பதிப்புரிமையின் உரிமை மீறல்

(g) Origin and functions of trade marks.

வணிகக் குறியீட்டின் தோற்றம் மற்றும் செயல்பாடுகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ambresh, a registered proprietor of pressure cooker design alleges that, 'Rizwan' by unauthorisedly applying his said pressure cooker design, has gained substantially. Discuss the remedies to Ambresh under the Designs Act, 2000.

ஆம்ரேஷ் என்னும் ஒரு பதிவு பெற்ற பிரஷர் குக்கரின் வடிவமைப்பின் உரிமையாளர், ரிஸ்வான் என்பவருக்கு எதிராக, தனது வடிவமைப்பை ரிஸ்வான் என்பவர் சட்ட விரோதமாக பயன்படுத்தி பயன் அடைந்துள்ளார் எனக் குற்றம் சாட்டுகிறார். ஆம்ரேஷ் என்பவருக்கு வடிவமைப்புச் சட்டம் 2000-ன் கீழ் கிடைக்கக் கூடிய தீர்வழிகள் என்ன என்று விவாதிக்கவும்.

9. Muthu started a textile business under a trade name "Rock". Ramu who is a friend of Muthu started his textile business under the name "Ruk". Muthu wants to file a case against his friend Ramu. Will he succeed? Advise to Muthu.

முத்து என்பவர் தனது ஜவுளி கடை வணிகத்தை ராக் என்னும் பதிவு செய்யப்பட்ட வணிக பெயரில் விற்பனை செய்து வருகின்றார். ராமு என்னும் முத்துவின் நண்பர் தனது ஜவுளி கடை வணிகத்தை "ரக்" என்னும் பெயரில் விற்பனையைத் தொடங்குகிறார். முத்து என்பவர் தனது நண்பர் ராமுவிற்கு எதிராக வழக்குத் தொடர விரும்புகிறார். அவர் வெற்றி பெறுவாரா? அவருக்கு அறிவுரை வழங்குக.

10. Rajesh is a Bio-Technologist. He invented a new plant medicine which is useful to cure Covid-19. He applied for a grant of patent for his invention. This application was rejected by the controller of patent. Decide.

ராஜேஷ் என்பவர் ஒரு உயிரி தொழில்நுட்பவியலாளர். அவர் ஒரு புதிய தாவர மருந்தினை கோவிட்-19க்காக கண்டுபிடித்துள்ளார். அதை அவர் காப்புரிமை பெறுவதற்காக மனு அளித்தார். ஆனால் காப்புரிமை கட்டுப்பாட்டாளர் அதன் விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்கிறார். தீர்மானி.

---